DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 187/2018

Prosecution side witness for P.W.5

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. அருண்குமார் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **25.06.2025.**

A2,4 are present. A3 produced.

<u>முதல்விசாரணை:–</u>

நான் தூத்துக்குடி, தாளமுத்துநகர், தாய்நகரில் கடந்த 8 வருடமாக குடியிருந்து வருகிறேன். 2017 ஆம் வருடம் EEE படித்துவிட்டு வேலையில்லாமல் இருந்தேன். தற்போது பாம்சுகர் எக்ஸ்போர்ட் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் கொலையுண்டு இறந்துபோன சங்கர்ராஜாவை தெரியும். அவர் எங்கள் ஏரியாவில் உள்ளவர்.. அ.சா.1 ரஞ்சித் குமாரை தெரியும், . சங்கர்ராஜின் அப்பா கார்த்தியராஜாவை தெரியும். அ.சா.3 குமார் ஆகியோரை தெரியும். ஆஜர் எதிரிகளைத் தெரியாது. எதிரி நண்டால் என்ற முனிஸ்வரனை தெரியாது. சங்கர்ராஜா கொலை வழக்கு சம்மந்தமாக எனக்கு என்ன தெரியும் என்றால் எனக்கு எதுவும் தெரியாது. நான் நேரில் எதுவும் பார்க்கவில்லை. சங்கர் ராஜா காயம்பட்டது சம்மந்தமாக தூத்துக்குடி அரசுமருத்துவமனையில் வந்து பார்க்க வந்திருந்தேன். அங்கே சங்கர்ராஜா அவசர சிகிச்சைபிரிவில் இருந்தார். அங்கு வைத்து போலீசார் என் பெயர் விலாசத்தை கேட்டு தெரிந்து கொண்டார்கள். கொலை வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். அரசு மருத்துவமனையில் வைத்து கேட்டார்கள். ராஜா அண்ணன் அடிபட்டு அரசுமருத்துவமனையில் கிடப்பதாக கேள்விப்பட்டு போனேன். இறந்துபோன சங்கர்ராஜாவை எனக்கு தெரியும். அவர் என்னுடன் வேலை பார்க்க வந்துள்ளார். போலீசார் என்னை விசாரித்தார்கள். எதிரிகள் சங்கர்ராஜாவை அடித்து கொலை செய்ததை நான் நேரடியாக பார்க்கவில்லை.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்திற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரணையின்போது, கடந்த 01.01.2017 ஆம் தேதி மாரிமுத்து கஞ்சா வியாபாரம் செய்தது சம்மந்தமாக சங்கர்ராஜா மற்றும் தெருவில் உள்ளவர்கள் சேர்ந்து போலீசிற்கு தகவல் சொல்லி மாரிமுத்து ஜெயிலுக்கு போய்விட்டு வெளியே வந்தான் என்றும், ஜெயிலுக்கு போவதற்கு சங்கர்ராஜா குடும்பம்தான் காரணம் என்றும், அதனால் 01.01.2017 அன்று சுமார் மாலை 4.00 மணியளவில் நானும், ரஞ்சித்குமார் மற்றும் நண்பர்கள் எங்கள் தெருவில் பேசிக்கொண்டிருந்தபோது எங்களுக்கு தெரிந்த ஜோசப் மகன் ஜேசு என்பவர் எங்களிடம் வேகமாக வந்து ரஞ்சித்குமாரின் உறவினரான சங்கர்ராஜாவை பாத்திமா வீட்டின் முன்பு வைத்து பாத்திமா, அவரது மகன் மாரிமுத்து அவனுடன் சேர்ந்து பிரச்சனை செய்கிறார்கள் என்று சொன்னான் என்றும், உடனே நாங்கள் அங்கு சென்று பார்க்கும்போது மாரிமுத்து கையில் பலகை கட்டையுடன் அவனுடன் இருந்த 2ம் எதிரி ஜெமினி, 3ம் எதிரி நண்டால் மற்றும் 4ம் எதிரி ராஜா ஆகியோர்கள் சுற்றி நின்றுக்கொண்டு சங்கர்ராஜாவை பார்த்து மாரிமுத்து எங்களை போலீசில் காட்டிக்கொடுத்த நீ உயிரோடு இருக்ககூடாது என்று பலகை கட்டையால் சங்கர்ராஜாவின் தலையின் பின்புறம் இதோடு சாவுல கூதிமவனே என்று சொல்லி ஓங்கி அடித்தார் என்றும், சங்கர்ராஜா கீழே விழவும் மற்றவர்கள் கையாலும், காலாலும் அடித்தார்கள் என்றும், அடித்து ஏறி மிதித்தார்கள் என்றும், நாங்கள் கூட்டமாக சென்று சத்தம் போடவும், எதிரி ஜெமினி என்பவர் கத்தியை காட்டி கிட்டே வந்தால் கொலை செய்வதாக மிரட்டினார் என்றும், நாங்கள் எல்லோரும் சத்தம்போட்டு கூச்சல் இடவும் அவர்கள் ஓடிவிட்டார்கள் எனவும், மாரிமுத்து கட்டையை கீழே போட்டுவிட்டு சென்றுவிட்டார் என்றும், சங்கர்ராஜா அந்த இடத்தில் வாய் வழியாகவும், மூக்கு வழியாகவும் இரத்தம் வந்து பேச்சி மூச்சி இல்லாமல் கிடந்தார்என்றும், அவரது தலையின் பின்பக்கம் வீக்கமாக இருந்தது என்றும், உடனே நாங்கள் கணேசன் என்பவரின் மகன் மகேஷ் என்பவரின் காரில் ஏற்றி தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம் என்றும் அவர் சுயநினைவு வராமலேயே 06.01.2017 அன்று காலை 6.00 மணிக்கு இறந்துவிட்டதாகசொன்னார்கள் என்றும், இதனை நேரில் பார்த்த நாங்கள் போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானம் பேசிக்கொண்டதால் எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றுசொன்னால் சரியல்ல.

குறுக்குவிசாரணை (2,3, 4 எதிரிகள்தரப்பில் இல்லை என சொல்லப்பட்டது.)